தார்கள். மகனின் செவ்வதனத்தைக் கண்ணுற்ற தாயார்

بارك فيك الله من غلام   يا ابن الذى من حومة الحمام

نجا بعون الملك المنام   فودى غداة الضرب بالسهاء

بمائة من ابل سوام   ان صح ما ابصرت فى المنام

فانت مبعوث الى الانام   من عند ذى الجلال الاكرام

تبعث فى الحل وفى الحرم   تبعث بالتحقيق والاسلام

دين ابيك البر ابراهام   فالله انهاك عن الاصنام

ان لا تواليها مع الاقوام

என்னருமைப் புதல்வரே! அல்லாஹ் தங்களுக்கு அருள் புரிவானுக! நீங்கள் ஒரு பெரும் தலைவரினதும் சிறப்புமிக்க கூட்டத்தினதும் புதல்வராவீர். கொடையும் தயாள மனப்பான்மையும் தன்னுள்ளே அடங்கிய அந்த கிருபையுடைய நாயனின் உதவியால் எவர் வெற்றி பெற்ருரோ அவர் வாழ்நாளைப் பாதுகாக்க ஸுப்ஹு நேரப் போட்டியில் சீட்டு போடப்பட்டார்.

அவருக்கு பகரமாக அழகிய வம்சாவழியினரின் நூறு ஒட்டகைகள் பகரமாக முன் வைக்கப்பட்டன. எனக்கு சந்திரமானவரே! எனக்கு கனவில் காண்பிக்கப் பட்டது உண்மையாயின. மழலையே! நீங்கள் உலக சமூதாய மக்கள் யாவருக்கும் சங்கையும் வலிமையுமிருக்க இறைவனின் பக்கத்தில் நின்றும் நபியாக அனுப்பப்பட இருக்கின்றீர்கள். ஹலால் எது ஹராம் எது பிரித்துக் காட்டும் ஒருவராக அனுப்பப்பட உள்ளீர்கள்.

எந்த [illegible] ங்கள் மூதாதையினர்களான ஹழ்[illegible] அலைஹிஸ்ஸலாமவர்கள் இருந்

தார்களோ அல்லாஹ் உங்களை சிலை வணக்கத்திலிருந்தும், சிலை வணக்கம் புரிவோரின் சகவாசத்திலிருந்தும் பாதுகாக்கப்படுவீர்கள் எனக்கூறிய பின்னர் உயிருள்ள யாவும் அழிந்திடும். உருவாக்கப்படுபவை முடிந்திடும். பெரியவைகள் இல்லாமலாகி விடும். நானும் மரணிக்கப்படுபவள். இருந்தும் பரிசுத்தமான நற்குணங்களையுடைய ஒருவரை விட்டுச்செல்வதால் என்றும் நான் ஞாபகமூட்டப்படுவேன் எனக்கூறியதோடு கண்களை மூடிக் கொண்டார்கள். ‘‘இன்னலில்லாஹி’’.

இதனை அறிவிப்பவர், அச்சமயம் அங்கே வீற்றிருந்தோர் யாவரும் அன்னையரின் மறைவையிட்டு ஜின்களின் அழுகுரலையும் செவிமடுத்தோம் என்று கூறியதாக ஹழ்ரத் ஸுஹ்ரியினது கூற்றைக் குறிப்பிட்டுள்ளார்கள். இம்மேற்கூறிய வரலாற்று சம்பவங்களை தன் கூற்றுக்கு தக்க ஆதாரமாக எடுத்தியம்பிய பின்பு ஸெய்யிதுனா ஜலாலுத்தீன் சுயூத்தி (அதாவது இச் சிறப்புமிக்க நூலாசிரியர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்) எம்மை விளித்து,

ஹழ்ரத் அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அவர்களது கூற்றின் மூலம் அவர்களும் அவர்களது குடும்ப அங்கத்தினர்களும், சிலை வணக்கம் புரிந்துவந்த அரபியர்களோடு தோழமை கொள்ளவில்லை என்பதும் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் மார்க்கத்தை ஏற்றிருந்தார்கள் என்பதும் அவர்கள் புதல்வர் இறை சமூகத்திலிருந்து இஸ்லாம் மார்க்கத்தைக் கொண்டு அனுப்பப்படுபவர் எனக்கூறியதும் ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் இணைவைப்பவராக இருந்திருக்க இடம்பாடேயில்லை என்பது தெளிவாகவில்லையா? எனக் கேட்கின்றார்கள்.

தொடர்ந்து இமாம் அவ[illegible]ன்சென்ற

நபிமார்களின் தாய்மார்கள் விடயத்தில் நம்பத்தகுந்தவர் களின் கூற்றுகளை கவனித்ததில் அவர்கள் யாவரும் முஃமின்களாகவே இருந்துள்ளனர் என்பது புலனாகிறது.

ஹஜ்ரத் நபி இஸ்ஹாக், நபி மூஸா, நபி ஹாரூன், நபி ஈஸா அலைஹிமுஸ்ஸலாம் போன்றோர்களின் தாய்மார் களும், நபி ஹூத் அலைஹிஸ்ஸலாமவர்களின் தாயி னதும் நிகழ்வுகளை குர்ஆனில் காணலாம். இவர்கள் நபிமார்களாகவும் இருந்தனர் என்பதும் சிலரின் அபிப் பிராயமாகும்.

ஹழ்ரத் நபி இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாமவர்கள் தாய் ஹாஜரு, நபி யஃகூபின் தாய் அவரது புதல்வர் களின் தாய், நபி தாவூத், நபி சுலைமான், நபி ஸகரிய்யா, நபி யஹ்யா, நபி ஷம்வீல், நபி ஷம்ஊன் நபி துல்கிப்ல் அலைஹிமுஸ்ஸலாம் ஆகியோரின் தாய்மார்களும் இஸ் லாத்தில் இருந்ததாக ஹதீதுகளும் வந்துள்ளன.

நபி நூஹ், நபி இப்ராஹிம் அலைஹிமஸ்ஸலாமவர் களினது தாய்மார்களும், முஃமின்களாக இருந்தனர் என்பதாக சில தப்ஸீராசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதனை அபூஹய்யான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தன் தஃப்ஸீரில் உண்மைப்படுத்தியுள்ளார் கள். நாம் முன் சென்ற வரிகளில் ஹழ்ரத் நபி ஆதம், நபி நூஹ் இருவருக்குமிடைப்பட்ட காலத்தில் இறைவனை நிராகரிப்போர் எவரும் இருந்ததில்லை என்பதாக ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பைக் குறிப்பிட்டுள்ளோம் என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

நபி இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தனதும் தன் பெற்றோர்கள் மற்றும் முஃமின்கள் யாவரினதும் பிழைகளை தவறுகளை மன்னிப்பாயாக! என்று பிரார்த்

தனை புரிந்த இறைக்கூற்றையும் கண்டோம். மேலும் அவரது தந்தைக்காக (தந்தை என்றால் சிறிய தந்தை) குறிப்பாக பாவ மன்னிப்புக் கோருவதையே திருமறை தடுத்ததே அன்றி, தாயின் விடயத்தில் எந்த கூற்றையும் காணமுடியாதது அவரது தாய் முஃமினாக இருந்திருக்க சான்றாகின்றது என்றும் கூறுகின்றார்கள்.

இமாம் ஹாகிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "முஸ்தத்ரக்" எனும் கிரந்தத்தில் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிட்டதாக ஸஹீஹான ஸனதுடன் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

عن ابن عباس رضي الله عنه قال. . . كانت الانبياء من بني
اسرائيل الا عشرة نوح وهود وصالح ولوط وشعيب وابراهيم
واسماعيل واسحاق ويعقوب ومحمد عليهم الصلوة والسلام
وبنو اسرائيل كلهم مؤمنين لم يكن فيهم كافر الى ان بعث عيسى
عليه السلام فكفر به من كفر فأمهات الانبياء الذين من بني
اسرائيل كلهن مؤمنات وايضا فغالب انبياء بنى اسرائيل كانوا
اولاد انبياء أو اولادهم فان النبوة كانت تكون في سبط منهم
يتناسلون كما هو معروف في أخبارهم

நபிமார்களில் நபி நூஹ், நபி ஹூத், நபி ஸாலிஹ், நபி லூத், நபி ஷுஐபு, நபி இப்ராஹிம், நபி இஸ்மாயில், நபி இஸ்ஹாக், நபி யஃகூப், நபி முஹம்மது ﷺ ஆகியோரைத் தவிரவுள்ள நபிமார்கள் பனி இஸ்ரவேலர்களைச் சார்ந்தோர் என்பதாகும்.

பனூ இஸ்ரவேலர்களின் புதல்வர்கள் யாவரும்

காபிர்களன்றி முஃமின்களாகவே இருந்தார்கள். ஹழ்ரத் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அனுப்பப்பட்டதும் சிலர் அவரைக் கொண்டு மறுக்கலாயினர். பனீ இஸ்ரவேலர் கள் மத்தியில் தோன்றிய நபியவர்களின் தாய்மார்கள் எல்லோரும் முஃமின்களாகத்தான் இருந்துள்ளனர்.

பனீ இஸ்ரவேலர்களின் நபிமார்கள், முன்னர் சென்ற நபிமார்களின் புதல்வர்கள் அல்லது அவர்களின் புதல்வர்களே நபிமார்களாக இருந்திருக்கின்றனர். ஏனென்றால் நுபுவ்வத் எனும் தொடர்வரிசை அவர் களின் வம்சா வழியினர் மத்தியிலேயே தான் சுழன்று கொண்டிருந்தது என்பதாக அவர்களது வரலாறு சான்று பகர்கின்றது. இவர்களன்றி மேற்கூறிய பத்து நபிமார் களில் நபி நூஹ், நபி இப்ராஹீம், நபி இஸ்மாயில், நபி இஸ்மாயில், நபி யஃகூப் அலைஹிமுஸ்ஸலாம் ஆகி யோரின் தாய்மார்கள் முஃமின்களே என்பது நிரூபிக்கப் பட்ட ஒன்று. நபி ஹூத், நபி சாலிஹ், நபி ஷுஐப் போன்றோரின் தாய்மார்கள் ஈமான் உள்ளவர்களாக இருந்தார்களா? என்பதற்கு ஆதாரம் தேவை தான். அவர்களும் ஈமான் உடையவராக இருந்திருப்பார்கள் என்று நல்லெண்ணம் கொள்வதே சிறப்பானதாகும். அதற்கான ஆதாரங்களும் அல்லாஹ் உதவியால் தெரியவரும்.

இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் அல்லாமா பஸ்ஸார் அல்லாமா தப்ரானி அல்லாமா ஹாகிம், இமாம் பைஹகி ரஹிமஹுமுல்லாஹ் ஆகியோர் தத்தம் கிரந்தங்களில் ஹழ்ரத் இர்பாழ் பின் சாரியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்தை குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது,

أن رسول الله صلّى الله عليه وسلّم قال . . . اني عند الله
لخاتم النبيّين وان آدم لمنجدل في طينته وسأخبركم عن ذالك

دعوة ابراهيم وبشارة عيسى ورأيا امي التي رأت. وكذالك أمهات النبيّين يرين وأن أم رسول الله رأت. وكذالك امهات النبيّين يرين وأن أم رسول الله صلّى الله عليه وسلّم رأت حين وضعته نورا اضائت له قصور الشام، ولاشك أن الذي رأته أم النبيّ صلّى الله عليه وسلّم في حال حملها به وولادتها له من الآيات اكثر واعظم مما رآه سائر الامهات الانبياء

நான் அல்லாஹ்வின் ஏற்பாட்டில் ஆதம் மண்ணிற் கிடையில் வீற்றிருக்கையிலே இறுதி நபியாய் இருந்தேன். நபி இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாமவர்கள் துஆவும், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் முன் அறிவிப்புச் செய்ததும், ஹழ்ரத் ஆமினா கண்ட கனவும் நானே தான்.

இவ்விதமாக ஏனைய நபிமார்களின் தாய்மார்களும் அவரது புதல்வர்களினதும் நிலையைக் கனவில் காண்போராயிருந்தனர். என் தந்தையும் என்னைப்பற்றி கனவு காண்பவராயிருந்தார்கள். நபிகள் நாதர் ﷺ அவர்களின் அருமைத் தாயார் அவர்கள் புதல்வரைப் பெற்றெடுத்த சமயத்தில் ஒரு ஒளியைக் கண்டார்கள். அந்த ஒளி ஷாம் தேசத்தின் மாளிகையை ஒளிமயமாக்கி விட்டது.

நபிகளார் அவர்களை கற்பறையில் தாயார் சுமந்து கொண்டிருந்த காலக் கட்டத்தில் கண்ட காட்சிகளும், பெற்றெடுத்த நேரத்தில் கண்ட நிகழ்வுகளும் சந்தேக மின்றி பிற நபிமார்களின் தாய்மார்கள், அவர்கள் புதல்வர்கள் பற்றி கண்ணுற்ற காட்சிகளை விட பன் மடங்கு மேலானதும் அதிர்ச்சியூட்டக் கூடியதும் மேன்மையானதுமாகும். இதுபற்றி மேலும் அறிய

விரும்பின் ''கிதாபுல் முஃஜிஸாத்'' தைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

சில வரலாற்று ஆசிரியர்கள் நபிகளார் ﷺ அவர்களுக்கு அமுதூட்டிய ஹலீமா, செய்யிதத்துனா துவைபா, செய்யிதத்துனா உம்மு ஐமன் ஆகியோர் இஸ்லாத்தில் இணைந்து கொள்வார்கள் என்று இருந்த தனால் தான் அச்சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப் பட்டது எனக் குறிப்பிடுகின்றார்கள்.

உங்களிடத்தில் நபிகள் கோமான் ﷺ அவர்கள் பெற்றோர்கள் விடயத்தில் அவர்கள் இருவர் களும் (அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக) நரகவாதி கள் காபிரீன்கள் என்பதாக வந்த நபிமொழியான என் பெற்றோர்கள் எப்படி நடந்தார்களோ எனக்கூறிய சமயத்தில் நரகவாதிகள் பற்றி கேட்கக்கூடாது எனப் பொருள்படும் விதமாக இறக்கப்பட்ட இறை ஆயத், நபிகள் கோமான் ﷺ அவர்கள் தன் தாய்க்காக பாவ மன்னிப்புத் தேட, ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர் கள் நபிகள் நாயகம் ﷺ அவர்களுக்கு ''லா தஸ்தஃபிர் லிமன் மாத்த முஷ்ரிக்கன்'' முஷ்ரிக்காக மரித்தோருக்காக பிழை பொறுக்க தேட வேண்டாம் எனக் கூறியது, ''நபியே, முஃமின்களோ முஷ்ரிக்கீன் களுக்காக பிழை பொறுக்க தேடக் கூடாது'' எனப் பொருள் வரும்படியான இறைவசனம், நபிகளார் ﷺ அவர்களிடம் முலைக்காவின் புதல்வர்கள் தங்களின் தாய்மார்கள் பற்றி கேள்வி கேட்க நரகத்தில் என்றதும் அவர்கள் உள்ளங்கள் வேதனைப்படுவதை உணர்ந்த நபியவர்கள் அவர்களை அழைத்து என் தாயும் உங்கள் தாயோடு தான் எனக் கூறியவைகளுக்கு என்ன பதில் கூறுவீர்கள்? எனக் கேட்டால், இந்நூலாசிரியரான இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பதிலைக் கவனியுங்கள்.

தன் அருமை தாயாரின் பிழைகளை மன்னிப்பாயாக! என நபிய்யுல்லாஹ் ﷺ அவர்கள் இருகரமேந்த ஷிர்க்கில் மரித்தோர்களுக்காக இஸ்திஃபார் செய்ய வேண்டாம் என்பதையும், இது சம்பந்தமாக முஸ்லிம் ஷரீபில் பதிவாகியுள்ள திருநபி வாக்குகளைத் தவிர்ந்த வைகள் நம்பத்தகுந்த ஸஹீஹான அறிவிப்புக்கள் அல்ல.

மேலே இடம் பெற்ற நபிமொழிகளில் என் பெற் ரோர்கள் நிலை என்னவோ என்பதும் அதற்கான இறை வசனமும் ‘‘நம்பத்தகுந்த நூலாசிரியர்களில் எவரும் இதனைக் குறிப்பிட்டதாக தெரியவில்லை இருந்தும் சில தப்ஸீர்களில் தொடர்பற்ற அறிவிப்பாளர்களை குறிப்பிட் டுள்ளனர். இதனை ஏற்கவோ ஆதாரமாக கொள்ளவோ முடியாது.

நீங்கள் அதனையே மென்மேலும் ஆதாரமாகக் கொள்வீர்களாயின் இதனை விட சக்திமிக்க மற்று மொன்றை முன் வைப்போம். இதனை இப்னு ஜௌஸி ஹழ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அறிவித்ததாக கூறுகின்றார்கள். அதாவது ஹழ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாமவர்கள் எங்கள் முன்னிலையில் ஆஜராகி அல்லாஹ் உங்களுக்கு ஸலாம் உரைக்கின்றான். நீங்கள் எவர் விலா எலும்பிலிருந்தும், எவர் கற்பறையிலிருந்தும் எவர் உங்கள் பொறுப்பாதிகாரியாகவும் இருந்தோர்கள் மீதும் நான் நரகத்தை ஹராமாக்கி விட்டேன் என்றும் நபியுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள். இதற்கு என்ன கூறுவீர்கள்.

நாம் இவர் கூற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்போரு மில்லை. அதனை ஆதாரம் தேடி பிடிப்போராகவும் இல்லை மேற்கூறிய நபிமொழி மர்தூத் ஏற்க முடியாதது என்பதற்கு வேறு பல காரணங்களும் உண்டு. அவை யாவன:-

இது இல்மு உஸூல், இல்மு பலாகத், இல்மு அஸ்ரார் பயான் இவைகள் அடிப்படையிலும் இதோடு காட்டப்பட்ட இறை வசனம் அதன் முன், பின் வசனங்களை பார்க்கையில் பேசப்பட்டு வரும் கூற்றுக் கும் இவ்வாயத்திற்கும் சம்பந்தமே இல்லை என்பதும், காட்டப்பட்ட இறைவசனங்கள் முன்சென்ற சமுதாய யஹூதிகள் விஷயத்தில் இறக்கப்பட்டவைகள் என்பதும் தெளிவாகின்றது. திருக்குர்ஆன் சூரு பகரா நாற்பதாம் ஆயத்தில்

يبنى اسرائيل اذكروا نعمتي التي انعمت عليكم واوفوا بعهدي
اوف بعهدكم واياي فارهبون

பனீ இஸ்ரவேலர்களே! நான் உங்களுக்கு வழங்கிய அருட்களை நினைவு கூர்வதோடு எனக்களித்த வாக்குறுதி யையும் நிறைவேற்றுங்கள். மேலும் என்னையே பயப் படுங்கள் என்பது தொடக்கம் நூற்றி இருபத்தி நான்காம் (124) வசனமான "வ இத் இப்தலா இப்றாஹீம" வரை யுள்ள வசனங்கள் யஹூதிகள் பற்றிய சம்பாஷணைக் குரிய தொடராகும்.

நாற்பது தொடக்கம் நூற்றி சொச்ச இலக்கம் வரை யான இறை வசனங்களிடையே இரு தடவைகள் "பனீ இஸ்ரவேலர்களே! நான் உங்களுக்கு வழங்கிய அருட் களை நினைவு கூறுங்கள்" என்பதாக திரும்பத் திரும்ப கூறியதன் மூலம் அஸ்ஹாபுல் ஜஹீம் என்று இறக்கப் பட்ட வசனத்தின் கருத்தும் வேதக்கார காபிர்கள் தான் என்பது தெரிய வருகின்றது.

சூரா பகரா முதல் நாற்பது ஆயத்துகளில் நான்கு வசனம் முஃமின்கள் சம்பந்தமாகவும், இரண்டு காபிர் கள் பற்றியும், பதிமூன்று நயவஞ்சகர்கள் விஷயத் திலும் நாற்பது தொடக்கம் நூற்றி இருபது வரை

யானவை பனீ இஸ்ரவேலர்கள் விஷயத்திலுமாகும் என்பதாக இப்னு ஜரீர் இப்னு முன்திர் ஆகியோர் ஹழ்ரத் முஜாஹித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்ததைக் குறிப்பிட்டுள்ளார்கள். இதன் இஸ்னுத் சரியானதாகும்.

இந்த சூரா மதனியாக இருப்பதால் அதில் அதிக மான வசனங்கள் யஹூதிகளே பற்றியதாகும் என்பதும் இதனே மேலும் வலுப்படுத்துகின்றது. மேலும் நாம் சற்று கண்களேத் திறந்து பார்ப்போமேயானுல் ஜஹீம் என்பது நரகில் மிக மிக கொடூரமிக்கதும் கடைசியானது மாகும் என்பதும் தெரியவரும்.

அஸ்ஹாபுல் ஜஹீம் என்பதில் ஜஹீம் என்பதற்கு விளக்கமளிக்கையில் அது மிகப்பெரியதும் பெரும் தேனேத்தளமானதுமாகும் என்பதாக அபூ மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக இப்னு அபீ ஹாதிம் குறிப்பிட்டுள்ளார்கள்.

## ஜஹீமிற்கு உரியோர்

நரகத்திற்கு ஏழு வாயில்கள் உள்ளன என்ற இறை வசனத்தின் கீழே நரகத்தில் ஜஹன்னம், லழா, ஹுதமா, சயீர், சகர், ஜஹீம், ஹாவியா என்பதாக ஏழு படித்தரங் கள் உள்ளன. இதில் அபூஜஹ்ல் ஜஹீம் எனும் நரகில் இருக்கிருன் என ஹழ்ரத் இப்னு ஜுரைர் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்ததாக ஹழ்ரத் ஜரீர் இப்னுல் முன்திர் இருவரும் குறிப்பிடுகின்றனர்.

அபூஜஹ்ல் என்பவன் எப்படிப்பட்டவன், இஸ்லாத்திற்கு விரோதமாக என்ன என்ன செயல்களே எல்லாம் செய்தவன் என்பது யாவரும் அறிந்த ஒன்று. இப்படிப்பட்டவன் ஜஹீம் என்னும் நரகிற்கு தகுதியான வன் என்ருல் அங்கு வேதனே இலகுவாக்கப்படும் என்பதாக எண்ணுவது சாத்தியமில்லே.

இறை பரம விரோதிகளான அபூ ஜஹ்ல் அவன் போன்ருேர்களுக்கு கடும் வேதனை வழங்கப்படும் தளம் ஜஹீம் எனும் நரகமாகும். அதேநேரம் நபிகளார் ﷺ அவர்களின் குடும்ப அங்கத்தவர் என்பதற் காக நரகவாதிகளிலேயே மிக இலகுவான வேதனை அளிக்கப்படுபவர் அபூதாலிபாவார்.

நபியுல்லாஹ் ﷺ அவர்கள் சிறு பிராயத் திலிருந்து நபித்துவம் வெளிப்படுத்தப்பட்ட காலத் திலும் வீற்றிருந்து மக்கள் பார்வையில் கலிமா மொழி யாது கடைசி விஞடி வரை சகல நிலையிலும் நபியோடு துணையாயிருந்து மறைந்த அபூதாலிபுக்கே இந்நிலை என்ருல் நபிகளார் ﷺ அவர்களின் பெற்ருேர்கள் சுவனவாதிகள் என்பதில் என்ன சந்தேகம்.

சொற்ப காலம் உலகில் வாழ்ந்து ஃபித்ரத்தின் காலப் பகுதியில் மரணத்தை எத்திக்கொண்ட எம் கோமான் ﷺ அவர்களின் அருமைப் பெற்ருேர்கள் அபூ தாலிபை விட நெருக்கமானவர்கள்.

முஷ்ரிக்காக மரித்தோர்களுக்கு பிழை பொறுக்கத் தேட வேண்டாம் என வானவர் ஜிப்ரீல் கூறிய ஹதீதை ஹழ்ரத் பஸ்ஸார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அறிமுகமில்லாத சிலர் கூறியதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

அபூஜஹ்ல் போன்ற கொடியவர்களின் தளமான ஜஹீம் என்பதில் தான் இவ்விருவரும் என்பதற்கு மேற் கூறிய "வலா துஸ்அலு அன் அஸ்ஹாபில் ஜஹீம்" என்ற வேதக்காரர்கள் விஷயத்தில் இறங்கிய திருமறை வசனத்தை ஆதாரமாகக்கொண்டால் சிறு குழந்தை தான் ஏற்குமா?

நபிகளார் ﷺ அவர்கள் தன் அருமைத்

தாய்க்காக இஸ்திஃபார் செய்வதை தடுக்கும் முக மாகவே நபிமார்களிலும் ஈமான் கொண்ட விசுவாசி களும் முஷ்ரிக்கீன்களுக்காக இஸ்திஃபார் செய்ய லாகாது என்ற திருமறை வசனம் இறங்கியது என்ற நபி மொழியை இமாம்களான புகாரி, முஸ்லிம் இருவரும் இவ்வசனம் இறங்கியதன் காரணத்தை விளக்குகையில் எனக்கு அனுமதி மறுக்கப்படும் வரை ஹழ்ரத் அபூ தாலிபுக்காக இஸ்திஃபார் செய்து கொண்டே இருப் பேன் என்ருர்கள். அவர்களுக்காக இஸ்திஃபார் செய் வதை தடுப்பதற்காகவே இறக்கப்பட்டது எனக் குறிப் பிடுகின்ருர்கள்.

முலேக்காவின் இரு புதல்வர்களின் கேள்விக்கு பதிலளித்த பின்னர் மீண்டும் அவர்களே அழைத்து என் தாயும் உங்கள் தாயோடு தான் எனக் குறிப்பிடப்பட்ட ஹதீதை இமாம் ஹாகிம் ரஹ்மத்துல்லாஹி அலேஹி அவர்கள் முஸ்தத்ரகில் குறிப்பிட்டதோடு அதனே ஸஹீஹ் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

முஸ்தத்ரக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸ்களே இலகுவாக ஸஹீஹா இல்லேயா என்பதை அறிந்திட லாம். ஹதீது கலே வல்லுனரிடையே காணப்படும் முடிவு யாதெனில், இமாம் அவர்கள் ஒரு ஹதீதை முஸ்தத்ரக்கில் மாத்திரம் குறிப்பிட்டிருந்ததால் அது ஏற்றுக்கொள்ள தகுதியானதல்ல என்பதேயாகும்.

இமாம் தஹபி அவர்கள் ‘‘முக்தஸருல் முஸ்தத் ரகில்’’ இந்த ஹதீதை குறிப்பிட்டதோடு இமாம் ஹாகிம் அவர்கள் கருத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த ஹதீதினே ரிவாயத் செய்த உதுமான் பின் உமைர் என்பார் கூற்று பலவீனமானது என்று இமாம் தாரகுத்னீ குறிப்பிடுவதுடன் இமாம் தஹபி அவர்களும் சத்தியம் செய்து இவர் ஹதீத் பலவீனமானது என்பதை

விபரித்துமுள்ளார். எனவே இவ்விஷயத்தில் காட்டப் படும் ஹதீதுகள் யாவும் பலவீனமானவைகளாகவே இருப்பதால் இது தொடர்பான மற்றைய விஷயங்களில் கவனம் செலுத்துவோம். இன்ஷாஅல்லாஹ்.

இங்கே கூறப்படும் கருத்துக்கள் முன்சென்ற வரி களில் கூறப்பட்டதான மௌட்டீக காலத்தில் மரித் தோரில் சிலர் நபி இப்ராஹீமின் மார்க்கத்தில் ஷிர்க்கின் செயல்களை புரியாது இருந்து வந்தனர் என்ற கருத்தினை உறுதிப்படுத்துவதாகும். எனவே இவ்விஷயம் உண்மையாயிருப்பின் கோமான் ﷺ அவர் களின் பெற்றோர்களும், அவர்களோடு இருந்திருக்க லாம் எனக்கூற தடையாக இருப்பது என்ன?

ஹாபிழ் அபுல் ஃபரஜ் பின் ஜௌஸி ''அத்தல் கீஹ்'' எனும் நூலில் மௌட்டீக காலத்தில் சிலை வணக்கத்தை அபூபக்ர் சித்தீக், ஸைத் பின் அம்ர் பின் நுபைல், அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ், உத்மான் பின் ஹுவைரிஸ், வரகத் பின் நௌபல், ரபாப் பின் பராஃ, அஸ்அத் பின் குரைபுல் ஹுமைரி, கைஸ் பின் சாயிதல் இயாதி, அபூ கைஸ் பின் ஸுர்மா போன்றோரே புரியாது இருந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். ஸைத் பின் அம்ர் பின் நுபைல், வரகத் பின் நௌபல், கைஸ் பின் சாயிதா ஆகியோர் நிலையான மார்க்கத்திலேயே இருந்தனர் என்பதாக நபிமொழிகளும் உள்ளன.

عن اسماء بنت ابى بكر قالت. . . لقد رأيت زيد بن عمرو بن نفيل مسندا ظهره الى الكعبة ويقول. . . يامعشر قريش مااصبح منكم أحد على دين ابراهيم غيري ثم يقول. . . اللهم اني لو اعلم احب الوجود اليك عبدتك به ولكني لااعلم

ஸைத் பின் அம்ர் பின் நுபைல் அவர்கள் கஃபாவின் சுவரில் சாய்ந்த வண்ணம் குறைஷிகளே என்னைத் தவிர உங்களில் எவரும் நிலையான மார்க்கத்தில் இல்லை. இறைவா! உன்னை எப்படி வணங்கினால் உனக்கு மிக விருப்பமாகும் என்பது எனக்கு தெரிந்திருப்பின் அவ் விதம் வணங்கியிருப்பேன். ஆனால் அதுபற்றிய அறிவு என்னிடமில்லையே எனக்கூறியதை செவியுற்றேன் என ஹழ்ரத் ஸித்தீக்குல் அக்பரின் புதல்வி ஹழ்ரத் அஸ்மா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் குறிப்பிடுவதுடன் ஸஹீஹ் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த கூற்றும் மௌட்டீக காலத்தில் நித்திய மார்க்கம் தஃவத் புரிபவரோ, அறிந்தவரோ எவரும் இருக்கவில்லை என்பதாக முன் சென்ற வரிகளின் கூற்றை வலுவடையச் செய்கின்றது என்பதாக நூலாசிரியர் கூறுகின்றார்கள்.

عن عمرو بن عبسة السلمى قال. . . رغبت عن آلهة قومي

فى الجاهلية ورأيت انها الباطل يعبدون الحجارة

ஹழ்ரத் அபூநயீம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தலாயிலுந் நுபவ்வா எனும் நூலில், மௌட் டீக காலமான எனது சமூகத்தாரின் கடவுள்களை நான் வெறுப்பவனாயிருந்தேன். அவர்கள் வணங்குபவை கள் கற்களே! அவை பொய்யானவை என்பதையும் உணர்ந்தேன் என அம்ர் பின் அபஸா அல்சலமி அவர் கள் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் பைஹகி, இமாம் நயீம் இருவரும் தலாயிலுந் நுபுவ்வத்தில் அம்ர் பின் ஹபீப் அவர்கள் குப்ரிய்யத் தான காரியங்களிலிருந்து நீங்கி இஸ்லாத்தின் காலத்தை எத்திக் கொண்டார் என்று ஹழ்ரத் ஷஃபி அவர்கள் கூறியதாக குறிப்பிட்டுள்ளனர்.

ஹழ்ரத் ஸித்தீக்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இறைவனின் பொருத்தத்திலேயே என்றும் இருந்தார்கள் என இமாம் அஷ்ஷெய்கு அபுல் ஹசன் அல் அஷ்அரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியிருக்கின்ருர்கள்.

இதன் கருத்தில் சிலர் பல விதமாகவும் குறிப்பிடத் தவறவில்லை. அவர்களில் சிலர் ஸித்தீக்குல் அக்பர் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் நபித்துவம் வெளிப்படும் முன்பே முஃமினுக இருந்தார் என்று கூறுகின்றனர் என்றும், மற்றும் சிலர் அவர் இறை ஏற்பாட்டில் பின்னெரு காலத்தில் ஈமான் கொண்டு நல்லோர்களில் ஆகி விடு வார் என்றிருந்ததனுல் இறை கோபத்திலாகாமல் நல் வழியே இருந்து வந்தார் என்றும் கூறுகின்றனர்.

قال الشيخ تقي الدين سبكي قال. . . لوكان هذا مراده لاستوى الصديق وسائر الصّحابة في ذالك وهذه العبارة التي قالها الاشعري في حق الصدّيق لم يحفظ عنه في حق غيره فالصواب ان يقال لم يثبت عنه حالة كفر بالله فلعل حالة قبل البعثة كحال زيد بن عمرو بن نفيل وأقرانه فلهذا خصص الصديق بالذكر عن غيره من الصّحابة

இந்த இரண்டாம் தரப்பினர் கூறிய கருத்து ஷெய்கு அஷ்அரீயின் கூற்றின் நோக்கம் என்ருல் ஸித்தீக்குல் அக்பர் நாயகத்தின் விஷயத்தில் இமாம் அஷ்அரீ அவர்கள் கூறியது போன்று பிறர் விஷயத்தில் கூறப்பட வில்லை. எனவே ஸித்தீக் நாயகம் அவர்கள் குப்ரியத்தில் இருக்கவில்லை. நபித்துவம் வெளிப்படும் முன்பு ஸைது பின் அம்ர் பின் நுபைல் இருந்த நிலையில்

இருந்தார். இதன் காரணமே பிறரை விட சித்தீக் நாயகம் அவர்களுக்கு முதலிடம் வழங்கப்பட்டது என்று இமாம் தகிய்யுத்தீன் சுப்கி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறுகின்றார்கள்.

## சத்திய மார்க்கத்தில் நித்திய நபியின் பெற்றோர்

قلت . . . وكذالك نقول في حق أبوى النبي صلى الله عليه وسلّم أنهما لم يثبت عنهما حالة كفر بالله فلعل حالهما حال زيد بن عمرو بن نفيل وأبى بكر الصدّيق واضرابهما مع ان الصدّيق وزيد بن عمرو انما حصل لهما التخفيف فى الجاهلية ببركة النبي صلى الله عليه وسلّم فانهما كانا صدقين له قبل البعثة وكانا يودانه كثيرا فابواه أولى بعود بركته عليهما وحفظهما مما كان عليه أهل الجاهلية

இவ்விதமே எம்கோமான் ﷺ அவர்களின் அருமைப் பெற்றோர்கள், சித்தீக் மற்றும் நௌஃபல் இருவருக்கும் ஒப்பாகுவதால் இவர்களில் நின்றும் குப்ரியத்தான செயற்கள் இடம் பெற்றிருக்கவே மாட்டாது. நபித்துவம் வெளிப்படுமுன்னரே இவ்விருவரும் ஸித்தீகீன்களாயிருந்தார்கள் என்றால் இவ்விருவரையும் விட பன்மடங்கு நெருக்கமான அருமைப் பெற்றோர்களும் நபிகளார் ﷺ அவர்களின் பேரருளால் மௌட்டீகக் கால மூடக் கொள்கையிலிருந்தும் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள் என்று இமாமுல் அஸ்ர் ஜலாலுத்தீன் சுயூதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்.

இப்போது நீங்கள் நபிகளார் ﷺ அவர்களின் திருச்சமூகத்திற்கு ஒருவர் ஆஜராகி என் தந்தை எங்கே எனக் கேட்டதற்கு நரகில் என்றதும் திரும்பிச் செல்ல நாட அவரை அழைத்து என் தந்தையும், உன் தந்தை யும் நரகிலேயே எனக் கூறியதாக முஸ்லிம் ஷரீபில் இடம் பெற்றுள்ள ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பும் நபியுல்லாஹ் அவர்கள் தனது தாய்க்கு பாவ மன்னிப்புக் கோர இறைவனிடம் உத்தரவு கோர அனுமதிக்கப்படவில்லை என ஹழ்ரத் அபூஹுரைராவின் அறிவிப்பான முஸ்லிம், அபூதாவூத் குறிப்பிடப்பட்டுள்ள நபிமொழி யின் விளக்கமென்ன எனக் கேட்பீர்களாயின் எனது தகப்பனும், உனது தகப்பனும் நரகிலே என்று கூறிய தாக குறிப்பிடப்பட்டதில் ஹதீது அறிவிப்பாளர்கள் ஒன்றுபடவில்லை.

இதனை அறிவிப்பு செய்பவரான ஹம்மாது பின் ஸலமா அவர்கள் ஹழ்ரத் தாபித் ஹழ்ரத் அனஸ் ரலியல் லாஹு அன்ஹு அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றதாக கூறுகின்றனர். இதனை மஃமர் அவர்களும் தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இருந்து கிடைத்ததாக கூறுகின்றனர்.

ஆனல் இவர் அறிவிப்பில் எனதும் உனதும் தகப்பன் நரகிலே எனக்கூறியதாக குறிப்பிடவேயில்லை. மாருக காபிர்களின் கபுறருகில் செல்வீர்களாயின் நரகத் தைக் கொண்டு எச்சரிக்கை செய்யுங்கள் எனக் கூறிய தாகவே குறிப்பிடுகிருர்.

நபியுல்லாஹ் ﷺ அவர்களின் தகப்பனையும் கூறியதாக எந்த ஒரு நம்பத்தகுந்த ஆதாரமும் இல்லை. நிச்சயமாக அவ்விதம் குறிப்பிட்டதாகக் கூறிய ஹம்மாதை விட, கூறவில்லை எனக் குறிப்பிட்ட மஃமர்

ஏற்கத்தக்கவர். ஹம்மாது அவர்கள் பற்றியும், அவர் அறிவிப்புக்கள் பற்றியும் பல விதமான கருத்துக்களை காண முடிகிறது.

மேலும் இவர் மனன சக்தி அற்றவராயிருந்ததன் காரணமே இமாம் புகாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இவரது அறிவிப்புகளுக்கு இடமளிக்கவில்லை. அதுபோல் இமாம் முஸ்லிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் ஹழ்ரத் தாபித் மூலம் கிடைத்ததாகக் குறிப் பிட்ட ஹதீதையே அன்றி வேறெதையும் குறிப்பிட்ட தாகவுமில்லை.

இமாம் ஹாகிம் அவர்கள் "அல் முத்க்கள்" எனும் நூலில் இமாம் முஸ்லிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தாபித் மூலம் கிடைத்ததாகக் குறிப்பிட்ட அறிவிப்பையே அன்றி ஹம்மாதின் வேறு அறிவிப்புக் களை "உஸூலில்" குறிப்பிடவேயில்லை எனக் குறிப்பிடு கின்றார்.

ஹழ்ரத் மூஃமர் அவர்களின் மனன சக்தி பற்றியும் அவரது அறிவிப்புக்கள் ரிவாயத்துக்களையும் ஏற்றுக் கொண்டதனாலேயே இமாம் புகாரி, முஸ்லிம் போன் றோர் தமது கிரந்தங்களில் பதிவாக்கியுள்ளனர். எனவே ஹம்மாதை விட மூஃமர் நம்பத்தகுந்தவராக இருப்ப தனால் மூஃமரின் அறிவிப்புக்கே முன்னுரிமை வழங்கப் பட்டு ஹம்மாதின் அறிவிப்பு கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதே எமது பதிலாகும்.

ஹழ்ரத் மூஃமரின் ரிவாயத்திற்குச் சமமான மற்று மோர் அறிவிப்பு ஹழ்ரத் சஃத் பின் அபீ வக்காஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் தாபித் ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு ஆகியோர் மூலம் கிடைக்கப் பெற்றதாகக் கூறியதை ஹழ்ரத்

பஸ்ஸார், ஹழ்ரத் தப்ரானி, இமாம் பைஹகி ஆகியோர் அதனைப்பதிவு செய்துள்ளனர்.

أن اعرابيا قال لرسول الله صلّى الله عليه وسلّم أين أبي؟ قال في النّار قال فاين ابوك؟ قال حيثهما مررت بقبر كافر فبشره بالنار

அதாவது ஒரு கிராமவாசி நபிகளார் ﷺ அவர்களின் திருச்சபைக்கு ஆஜராகி என் தந்தை எங்கே? எனக் கேட்டார். நரகில் என்றார்கள். மீண்டும் அவ்வரபி உங்கள் தகப்பன் எங்கே? எனக் கேட்க, நீ காபிர்களின் கப்ரருகில் செல்வாயானால் நரகிற்குச் சொந்தமானவர்கள் எனக்கூறும்படியாகச் சொன்னார்கள்.

இமாம் பைஹகீ அவர்கள் அக்கிராமவாசி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். இது சம்பந்தமான மற்றுமொரு ரிவாயத் இப்னு மாஜாவில் பதிவாகியுள்ளது. அதுவாகிறது,

عن الزهري عن سالم عن ابيه قال... جاء اعرابي الى النبيّ صلّى الله عليه وسلّم فقال... يا رسول الله ان ابي كان يصل الرحم وكان فاين هو؟ قال في النّار... قال فكانه وجد من ذالك فقال يا رسول الله فاين ابوك؟ قال رسول الله صلّى الله عليه وسلّم حيثما مررت بقبر كافر مشرك فبشره بالنار فاسلم الاعرابي بعد ثم قال لقد كلفني رسول الله صلّى الله عليه وسلّم تبعا ما مررت بقبر كافر الا بشرته بالنار

ஒரு கிராமவாசி பெருமானார் ﷺ அவர்களின் அருள்மிகு சபைக்கு ஆஜராகி என் தந்தை எல்லோருட

னும் நெருங்கிப்பழகும் நற்பண்புடையவராய் இருந்து மரித்தார். அவர் எங்கே? எனக் கேட்க, நரகில் என்ற பதில் கிடைத்ததால் மனம் நொந்தவராக அல்லாஹ்வின் தூதரே! உங்கள் தந்தை எனக் கேட்டதும், முஷ்ரிக்கீன் களின் கப்ரருகில் செல்வாயானல் என்ற முன்சென்ற சொற்ருெடர்களை உபயோகித்தார்கள். இதனுல் அவர் மனக்கஷ்டத்தை அடைந்ததாகவும் பின்பு இஸ்லாத்தை ஏற்றதாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

இம்மேற்கூறிய ரிவாயத்துகளின் மூலம் ரசூலே கரீம் ﷺ அவர்கள் பொதுப்படையாகக் கூறினுர் களேயன்றி, குறிப்பிட்டுக் கூறியதாக வரவில்லை. இவ் விதம் இடம் பெறுவது அறிவிப்பாளர்களை பொறுத்த தாகும். இதுபோன்ற பல ரிவாயத் - அறிவிப்புக்களை ஹதீது கிரந்தங்களில் காண முடிகின்றது.

உதாரணமாக :

ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக தொழுகையில் பிஸ்மில்லாஹ் ஓதவில்லை என்ற நபிமொழியை முஸ்லிமில் காண முடிகின்றது. ஆனுல் இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பிஸ்மில்லாஹ் ஓத வேண்டும் என்கின்ருர்கள். அதற்கான காரணத்தை கூறுகையில் பிஸ்மில்லாஹ் ஓதுவதில் தடையில்லை. மாருக அதனை செவிமடுக்கச் செய்வதே தடை என அறிவிப்பாளர் குறிப்பிட்டுள்ளார் என்கின்ருர்கள்.

ரசூலே அக்ரம் ﷺ அவர்கள் தனது அருமை தாய்க்காக பாவமன்னிப்புக் கோரவும் அனுமதி வழங்கப்படாததன் காரணம், அந்நேர சூழ்நிலைக்கேற்ப, அன்றி என்றும் பாவ மன்னிப்பு கோர முடியாது என்பதல்ல. ஏனென்ருல் இஸ்லாத்தில் ஆரம்ப கட்டத்தில் கடன் இருக்கும் நிலையில் ஒருவர் மரணமுற்ருல் அவருக்

காக ஜனஸா தொழுகை நிறைவேற்றுவது தடை செய்யப்பட்டதாக இருந்தது. இவ்விதமே நபிகளாரின் அருமைத்தாயும் குப்ரன்றி வேறு உலகளாவிய சிறு விடயங்களுக்காகவே அச்சமயம் பாவ மன்னிப்பு கோர அனுமதி வழங்கப்படவில்லை.

லகீத் பின் ஆமிர் அவர்கள் நஹ்யுக் பின் ஆஸிம் பின் மாலிக் பின் அல் முன்தபிக் அவர்களோடு மதீனா முனவ்வராவில் கோமான் நபியவர்களிடம் சென்றிருந் தார்கள். அவர்கள் கூறுவதாவது ரஜப் மாதத்தைக் கழிக்க மதீனா சென்ற நாங்கள் நபியுல்லாஹ் ﷺ அவர்களின் சபைக்குச் சென்று அவர்கள் பின் ஸுப்ஹு தொழுகையை நிறைவேற்றினோம். ஸுப்ஹு தொழு கையை நிறைவு செய்த பின்னர் மிம்பரில் ஏறி பிரசங்கம் புரிந்தார்கள். அச்சமயம் நான் (லகீத்) மௌட்டீக காலத்தில் மரித்தோருக்கு நல்ல பிரதி பலன் உண்டா? எனக் கேட்டேன். உடனே ஒரு கண்ணியமிக்க தோழர் எழுந்து, உனது தந்தை நரகின் ஒரு கோணத்தில் என்றார். சகலரதும் முன்னிலையில் இவ்விதம் அவர் கூறியதால் எனக்கு கோபம் பீறிட்டது. இதனால் நபிகளாரிடம் அவர்களின் தந்தை பற்றிக் கேட்போம் என எண்ணம் தோன்றியது. அவ்விதம் கேட்பது அவமரியாதை எனக் கருதி நாயகமே! உங்களின் குடும்பத்தினர் எங்கே? எனக் கேட்டேன்.

நபியுல்லாஹ் ﷺ அவர்கள் நீர் குறைஷி முஷ்ரிக் அல்லது ஆமிரி முஷ்ரிக் வம்சாவழியனரின் கப்ரருகில் செல்ல நேரிட்டால் நரகவாதிகள் என்பதாக கூறுமாறு பணித்தார்கள்.

எமது அன்றாட வாழ்க்கையில் எவரேனும் எமது பெற்றோரை ஏசிப்பேசினால், நாம் என்னைப்பற்றி என்ன வேண்டுமானாலும் கூறு. என் பெற்றோரைப் பற்றி

பேசாதே என்று சினம் கொள்கிறோம். சாதாரண எம்மால் எமது பெற்றோரை ஏசுவதை அனுமதிக்க முடியாதிருக் கையில் எம் கோமான் நபிகள் பிரான் صلى الله عليه وسلم அவர் களின் பெற்றோரைப் பற்றி அவர்கள் தகுதிக்குத்தகாத வார்த்தைகளை உபயோகித்தால் நாம் ஏற்றாலும் ஏற்கா விடினும் அல்லாஹ் ஒருபோதும் ஏற்க மாட்டான்.

நபிமொழியில் இடம் பெற்றுள்ள ''இன்ன அபீ'' என் தந்தையும் எனக் கூறியது உண்மை தான் (அதா வது அந்த ஹதீது ஸஹீஹானது தான்) என நிரூபிக்கப் பட்டாலும் அது ஹழ்ரத் அபூதாலிபே அன்றி ஹழ்ரத் அப்துல்லாஹ் அல்லவே அல்ல. இந்த உண்மை வரலாறுகளை படித்திருப்பின் உங்களுக்குப் புரியும்.

வரலாற்று நூலை புரட்டிப்பாருங்கள். ஹழ்ரத் அபூ தாலிப், நாயகம் صلى الله عليه وسلم அவர்களை எப்பெயர் கொண்டு அழைத்தார்? குறைஷிக் காபிர்கள், உங்கள் புதல்வர் எங்கள் கடவுள்களை ஏசிப்பேசுகின்றார். எனவே அவரை அவ்விதம் கூற விடாதீர்கள் என்று கூறியதையும் ஹழ்ரத் அபூதாலிபிடம் குறைஷிகள், உங்கள் புதல்வரை கொடுத்து விடுங்கள் அவரை நாங் கள் இல்லாமலாக்கச் செய்து விட்டு வேறு குழந்தையை தருகிறோம் என்றதும், நன்றாயுள்ளது என் புதல்வரை உங்களிடம் ஒப்படைத்து அவரை நீங்கள் கொலை செய்த பின் நீங்கள் வழங்கும் ஒருவரையா நான் வளர்ப் பது எனக் கூறியதும்,

ஹழ்ரத் அபூதாலிப் அவர்கள் ஷாம் நாட்டிற்கு வியாபார நோக்கமாக செல்லும் போது புதல்வர் صلى الله عليه وسلم அவர்கள் தனிமையில் இருந்திடுவார் என்பதற்காக தன்னோடு அழைத்துச் செல்வது வழமை. ஒருநாள் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் இடையிலே புஹைரா என்றழைக்கப்படும் பழமை

வாய்ந்த ஒரு பாதிரியை சந்திக்க நேரிட்டது. அவர் ஹழ்ரத் அபூதாலிபிடம் இக்குழந்தை உங்களுக்கு என்ன முறை எனக் கேட்க, என் புதல்வர் என்றூர். பாதிரி மீண்டும் இவர் தந்தை உயிருடன் இருக்க முடியாதே எனக்கூற, என்னையே இவரின் தகப்பன் என்று அரபியர்கள் பிரபல்யமாக அழைக்கின்றனர் என்றூர்.

நபியுல்லாஹ் ﷺ அவர்கள் பெற்றோர்களின் மறைவிற்கு பின்னர் ஹழ்ரத் அபூதாலிபே நபியவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்து சகல நடவடிக்கைகளிலும் உதவி ஒத்தாசையாய் இருந்ததனுல் இவர்தான் தந்தை என்று மக்கள் மத்தியிலே பிரபலமாக இருந்தது.

ஆகவே தோழர்கள் நபிகளாரிடம் உங்கள் தந்தை எங்கே எனக் கேட்டது ஹழ்ரத் அபூதாலிபையே அன்றி ஹழ்ரத் அப்துல்லாஹ்வை அல்ல. இதனை வலுப்படுத்தும் மற்றுமொரு நபிமொழி உம்முல் முஃமினீன் ஹழ்ரத் உம்முசல்மா ரலியல்லாஹு அன்ஹா அறிவிப்பதாக இமாம் தப்ரானி அவர்கள் பதிவாக்கியுள்ளதாவது.

عن ام سلمة ان الحارث بن هشام اتى النبيّ صلى الله عليه وسلّم يوم حجّة الوداع فقال... يا رسول الله تحث على صلة الرحم والاحسان الى الجار وابرار اليتيم واطعام الضيف واطعام المساكين وكل هذا كان يفعله هشام بن مغيرة فما ظنك به يا رسول الله؟ فقال رسول الله صلى الله عليه وسلّم... كل قبر لا يشهد صاحبه ان لا اله الاّ الله فهو جذوة من النار وقد وجدت عمى أبي طالب في طمطام من النار فاخرجه الله لمكانه مني واحسانه اليّ فجعله في ضحضاح من النار

ஹஜ்ஜதுல் விதாஃ தினத்தன்று ஹழ்ரத் ஹாரிஸ் பின் ஹிஷாம் அவர்கள் அல்லாஹ்வின் ரசூலே! நீங்கள் சொந்தபந்தங்களோடு சேர்ந்து வாழுமாறும் அண்டை வீட்டாருடன் நற்பண்புடன் ஏழைகளுக்கு உதவி ஒத்தாசையாகவும் விருந்தாளியை கண்ணியப்படுத்து மாறும் மிஸ்கீன்களுக்கு உணவளிக்குமாறும் கூறியிருக் கின்றீர்கள். என் தந்தை ஹிஷாம் பின் முகீரா அவர் களும் இவைகள் அனைத்தையும் புரிந்து வந்தார். இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? எனக் கேட்டார்.

எவரெல்லாம் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற ஏகத் துவத்தை உள்ளத்தால் ஏற்று வாயால் மொழிய வில்லையோ அவர் செல்லும் இடம் நரகமே தான். நானும் என் சிறிய தந்தை அபூதாலிபை நரகில் கஷ்டப் பட்டு கொண்டிருப்பதை கண்ணுற்றேன். இறைவன், அவர் என்னோடு நடந்து கொண்ட, எனக்கு உதவி ஒத்தாசையாக இருந்ததினால் அங்கிருந்து வெளியாக்கி அவருக்கென ஒரு தனி இடத்தை ஏற்படுத்தி ஆகக் குறைந்த வேதனையை வழங்குகின்றான் என்றார்கள் பூமான் நபி ﷺ அவர்கள்.

சந்தேகமின்றி புகாரி, முஸ்லிமில் இடம் பெற்றிருக் கும் நரகில் ஆகக்குறைந்த வேதனையளிக்கப்படுபவர் ஹழ்ரத் அபூதாலிபே என்ற நபிமொழி இதைவிட குறைந்த வேதனையோ, வேதனையளிக்கப்படுபவரோ நரகில் இல்லை என்பதையும் நபிகளார் திலகம் ﷺ அவர்களின் அருமைப்பெற்ரோர்கள் நரகிலேயே இல்லை என்பதையும் ஊர்ஜிதப்படுத்துவதோடு அவர்கள் விடயத்தில் நரகம் பற்றிய பேச்சிற்கே இடமில்லை என்பதும் புலனாகி விட்டது.

குழந்தைப்பருவத்திலிருந்து நபித்துவம் பகிரங்கப்

படுத்திய பின்பும் நபிகளாரோடு உதவி ஒத்தாசையாக இருந்த சிறிய தந்தை அபூதாலிபுக்கு மக்கள் அறிய ஏகத்துவ கலிமாவை மொழியாது மரணமுற்றும், நபிகளாரை கண்ணியப்படுத்தும் முகமாக அல்லாஹ் அவருடன் இவ்விதம் நடந்து கொள்கிறான் என்றால் ''நவூதுபில்லாஹ்'' நபித்துவத்தை வெளிப்படுத்தும் முன்பே இவ்வுலகைப் பிரிந்த அருமைப்பெற்றோர்களை நரக வாதிகள் எனக்கூற நாவு எப்படி முன்வந்தது?

ஹழ்ரத் அப்துல்லாஹ்விற்கு ஆண் குழந்தை பிறந்த தாக கூறியதும் மனமகிழ்ச்சியில் அவ்வடிமையை உரிமை விட்ட அபூலஹபுக்கு திங்கள் தோறும் சுட்டிக் காட்டி உரிமையிட்ட விரலினால் பேரமுதம் வெளியாக் கப்பட்டு அதனைப் பருகி பேரின்பம் கொள்கிறார் என்றால், கலிமா தைய்யிபாவை நாவால் மொழியாது மரணமுற்றாலும் நபிகளார் صلى الله عليه وسلم அவர்களுடன், அன்புடன், அதபுடன், நற்பண்புடன் நடந்தமைக்கு அபூதாலிபிற்கு நரகில் குறைந்த வேதனையும் வழங்கப் படுகிறது என்றால்!.....

ரசூலே எம்பிரான் صلى الله عليه وسلم அவர்களின் பெற்றோர் கள் நரகவாதிகளே அல்ல என்பது உறுதியிலும் உறுதி யானது. இதுவரை கூறிய விடயங்கள் யாவும் சைக் கினையே! அறிவுள்ளவனுக்கு சைக்கினை போதுமானது. தெளிவான புத்தியும், சிந்தனையும் கொண்டோருக்கு இதைவிட சான்று அவசியமல்ல. இவை அதிசயமு மல்ல. சிந்தித்தால் சீர் பெறலாம்.

## அலசிப்பார்த்தல்

இன்றைய காலத்தில் மார்க்கத்திற்கு நேர்மாறான கருத்துக்களை கூறுவதோடு, உண்மையை எடுத்துரைப் போரின் கருத்துக்களை பொய்ப்பிப்பதுடன் அதற்கு ஆதாரம் எங்கே? இதற்கு ஆதாரம் எங்கே? என தர்க்கம்

புரிவோர்களில் அதிகமானோர் மார்க்க அறிவற்ற மரக்கறி வியாபாரிகளும் மார்க்கத்தை பரப்பிய பெரியார் களோடு தொடர்பு கொண்டு அறிவைப் பெறாத அரை குறை அறிவைப் பெற்ற ஆலிம்களுமேயாவர். இப்படி யானவர்களுடன் நாமும் வாதாட்டம் புரிய முனைவது எமக்கு அழகல்ல எனக் கருதி அவர்களுக்கும் மற்று முண்டான பாமர மக்களினதும், சிந்தனையை இலகுவில் சென்றடைந்து சீர்தூக்கிப்பார்க்க சில மார்க்க ஆய்வுகளை இங்கே வைக்கிறோம்.

## இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் மத்ஹபைச் சார்ந்தோருக்கு

فان كان الّذي يجادل بذالك من أهل مذهبنا شافعي المذهب أقول له قد ثبت في صحيح مسلم أنه صلّى الله عليه وسلّم يقرأ فى الصلوة بسم الله الرحمن الرحيم وانت لاتصحح الصّلوة بدون البسملة وثبت فى الصّحيح أنه صلّى الله عليه وسلم قال. . . انما جعل الامام ليتم به فلاتختلفوا عليه فاذا ركع فاركعوا واذا رفع فارفعوا واذاقال سمع الله لمن حمده فقولوا ربّنا لك الحمد واذاصلّى جالسا فصلوا جلوسا اجمعون. وانت اذاقال سمع الله لمن حمده تقولوا سمع الله لمن حمده مثله واذاصلّى جالسا بعذر وانت قادر تصلى خلفه قائما لاجالسا . وثبت فى الصّحيحين في حديث التيمم انما يكفيك ان تقول بيديك هكذا ثم ضرب بيده ضربة واحدة ومسح الشمال

على اليمين وظاهر كفيه ووجهه وانت لاتكتفي في التيمم بضربة واحدة ولاالمسح الى الكوعين فكيف خالفت الاحاديث التي ثبتت في الصحيحين او احدهما

இம்மார்க்க சட்ட விடயத்தில் வாதாட்டம் புரியும் நீங்கள் இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களைப் பின்பற்றுபவர்களாயின் நாம் உங்களிடம் கேட்பது யாதெனின் நபியுல்லாஹ் ﷺ அவர்கள் தொழுகையில் பிஸ்மில்லாஹ்வை யாவரும் செவி மடுக்கும் அளவிற்கு ஓதியதாக முஸ்லிமில் ஸஹீஹான பொன்மொழிகள் சான்று பகரவில்லை என்பது தெரிந்தும் உங்கள் இமாம் அவர்கள் அதனை ஓதியே ஆக வேண்டும் என்று அதைக் கடமையாக்கியதற்கும் தொழுகையில் ஓர் இமாமைப் பின்பற்றி மஃமூன்களாக தொழுவீர்களானால் அவருக்கு மாற்றம் புரியாது ருகூவு செய்தால் நீங்களும் செய்யுங்கள். ருகூவிலிருந்து நிமிர்ந்தால் நிமிருங்கள், நிமிர்ந்ததும் சமி அல்லாஹு லிமன் ஹமிதா என்றதும் ரப்பனா லகல் ஹம்து என்றும் கூறும்படியாக நபிமொழி இருந்தும் உங்கள் இமாம் இஃதிதாலில் சமி அல்லாஹு லிமன் ஹமிதா என்றதும் மஃமூன்களான நீங்களும் அவ்விதமே கூறுவதற்கும், நிலையில் நின்ற வண்ணம் தொழுகை நடத்த முடியாத ஒருவர் அமர்ந்தவராக இமாமத் புரியும் பட்சத்தில் நின்று நிறைவேற்ற சக்தி பெற்றோர் அவரைப்பின்பற்றி நின்றே நிறைவேற்றக்குரியதற்கும்.

தயம்மம் செய்வதற்கு இரு கரங்களையும் மண்ணில் ஒரு முறை அடிப்பது முகத்திற்கும் கரங்களுக்கும் போது மானது என்பதாக புகாரி, முஸ்லிமில் நபிமொழி சான்று பகர்ந்தும், முகத்திற்கு ஓர் முறையும், கரங்களுக்கு மற்று மொரு முறையும் அடிக்கக் கூறியதற்கும் ஆதாரங்கள்

எங்கிருந்து கிடைக்கப்பெற்றது எனக் கேட்டால் சிறிதள வாயினும் அறிவு, அறிவுடையோரின் சகவாசமிருப் பின் எங்கள் இமாம் அவர்களுக்கு இதுதவிர அவர்கள் கூற்றிற்கான ஆதாரங்கள் கிடைத்தே இருக்கின்றன என்று பதிலுரைப்பீர்கள். (உண்மையும் அதுதான்)

## இமாமுல் அஃலம் அபூஹனீபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் மத்ஹபைச் சார்ந்தோருக்கு

وان كان المجادل حنفى المذهب أقول له قد ثبت في الصحيحين اذا ولغ الكلب في اناء احدكم فليغسله سبعا وانت لاتشترط فى النجاسة الكلبية سبعا وثبت فى الصحيحين لاصلوة لمن لم يقرأ بفاتحة الكتاب وانت تصحح الصلوة بدونها وثبت فى الصحيحين ثم ارفع حتى تعتدل قائما وانت تصحح الصلوة بدون الطمأنينة فى الاعتدال وتصح فى الحديث اذا بلغ الماء قلتين لم يبلغ خبثا وانت لاتعتبر القلتين فكيف خالفت الاحاديث الصحيحة؟ فيقول. . . قامت ادله أخرى معارضة لها فقدمت عليها فأقول له وهذا مثله.

இவ்வம்சத்திலே தர்க்கம் புரிபவர்கள் ஹனபி மத்ஹபைப் பின் தொடர்வோர்களாயின் அவர்களிடம் நாம் கேட்பது ஏதேனும் பாத்திரத்தில் நாய், தன் வாயை விட்டு விடுமானால் அப்பாத்திரத்தை ஏழு தடவைகள் சுத்தம் செய்யுமாறு கட்டளையிடப்பட்ட நபிமொழி புகாரி, முஸ்லிமில் பதிவாகியிருந்தும் இமாம் அவர்கள் ஏழு தடவைகள் சுத்தம் செய்தாக வேண்டும் என்பது

நிபந்தனையல்ல என்றதற்கும்,

பாத்திஹா சூறாவை ஓதாவிட்டால் தொழுகை இல்லை என்ற ஸஹீஹான மணிமொழி புகாரி, முஸ்லிமில் இடம் பெற்றிருக்க இமாம் அவர்கள் மஃமூம் அதனை ஓதா விடினும் நிறைவேறும் எனக் கூறியதற்கும், ருகூஃ செய்த பின்னர் நிமிர்ந்து நிற்கும் வரை உயரும்படியாக நபிமொழி புகாரி, முஸ்லிமில் சான்றாயிருந்தும் இமாம் அவர்கள் நிலையில் தரிக்காவிடினும் தொழுகை நிறை வேறும் என்றதற்கும், தண்ணீர் ஐநூறு ராத்தல் (குல்ல தைனி) இருப்பின் அசுத்தங்களை சுமக்காது என்பதாக நபிமொழி இருக்க இமாம் அவர்கள் இந்த அளவை கணக்கெடுக்காததற்கும் ஆதாரங்கள் எங்கே எனக் கேட்டால் சிறிதளவேனும் அறிவு, அறிவுடையோரின் சகவாசமிருப்பின் எங்கள் இமாம் அவர்களுக்கு இதுதவிர அவர்கள் கூற்றிற்கான ஆதாரங்கள் கிடைத்தே இருக்கின் றன என்று பதிலுரைப்பீர்கள். (உண்மையும் அதுதான்)

## இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் மத்ஹபைச் சார்ந்தோருக்கு

فان كان المجادل مالكى المذهب أقول له قد ثبت في الصحيحين المتبائعان بالخيار مالم يتفرقا وانت لاتثبت خيار المجلس ، وثبت في صحيح المسلم انه صلّى الله عليه وسلّم توضأ ولم يمسح كلّ رأسه وانت توجب في الوضوء مسح كل الرّأس فكيف خالفت ما ثبت في الصحيح؟ فيقول قامت أدلة أخرى معارضة لله فقدمت عليه فأقول له وهذا مثله .

நாம் கூறிவரும் விடயத்திற்கு மாற்றுக் கருத்து

கூறும் நீங்கள் இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் மத்ஹபை பின்பற்றுவோர்களாயின் உங்களுக்கான கேள்வி :

வியாபாரம் புரியும் விடயத்தை நபிமொழியின் ஆதாரங்கள் மூலமாக நபி பொன்மொழிகளை உள்ளடக்கிய ஹதீத் கிரந்தங்கள், ஒரு பொருளை விற்பனை செய்பவனும், அதனை வாங்குபவனும் ஓர் இடத்தில் அமர்ந்து அதற்கான விலையில் இருவரும் ஒன்றுபட்டால் அப்பொருளை விரும்பின் வாங்கலாம். வாங்காமலும் விடலாம். ஆனால் அவ்விருவர்களில் எவரேனும் அவ்விடத்தை விட்டு நகர்ந்த பின் மீண்டும் சமூகமளித்து அவ்விலையில் மாறுபட்டால், முன்னர் இருவரும் ஒன்றுபட்ட விலைக்கே விற்பனை செய்ய வேண்டும் என்பதாக சாட்சியளிக்கையில் உங்களது இமாம் அவர்கள் அவ்விருவரும் விரும்பியவாறு புரியலாம் அதற்கு இடம் அவசியமல்ல எனக் கூறியதற்கும், நபியுல்லாஹ் ﷺ அவர்கள் வுலுச்செய்கையில் தலையை சம்பூரணமாக மஸ்ஹ் தடவவில்லை என்பதாக முஸ்லிம் ஷரீபில் ஸஹீஹான ஹதீத் குறிப்பிடப்பட்டும், உங்கள் இமாம் தலையை சம்பூரணமாக மஸ்ஹ் செய்வதை வாஜிபாக்கி நபிமொழிகளுக்கு மாற்றம் புரிந்ததேன்? எனக் கேட்டால், நீங்களும் அறிவின் நுணுக்கங்களை, அனுப்பிரமாணமாயினும் அறிந்தவர்களாயிருப்பின் முன் மத்ஹபினரின் பதிலையே கூறுவீர்கள். (உண்மையும் அதுதான்)

## இமாம் ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் மத்ஹபைச் சார்ந்தோருக்கு

وان كان المجادل حنبلي المذهب اقول له قد ثبت

فى الصحيحين من صام يوم الشك فقد عصى ابا القاسم وثبت